**OS.76/2022**

**நாள். 07.08.2025.**

**வா.சா.1 – மீராபானு**

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவாசொத்துக்கள் ஆதியில் கருப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கருப்பனுக்கு அம்மாசி என்ற சலிமா என்பவர் மனைவி என்றால் சரிதான். கருப்பனுக்கு மங்கைகிழவன் என்ற ஆரிபு, மங்களம், கருப்பையா என்ற அன்வர் உசேன், பஞ்சவர்ணனம் என்ற ஜெரினா காலித் ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் மங்களம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மங்களத்திற்கு சேது என ஒரு மகன் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். சேதுவிற்கு மனோகரன், ராஜ்குமார், மனோன்மணி, முகம்மது அமீன், சுரேஷ்குமார் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். அதில் மனோகரன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மனோகரனுக்கு உஷா என்ற மனைவியும், அபிராமி, மைதிலி என்ற பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். சுரேஷ்குமார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சுரேஷ்குமாருக்கு மோகனவனிதா, ஜனனி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மங்கை கிழவன் என்ற ஆரிபுக்கு கருங்கம்மாள் என்ற மனைவி உள்ளார் என்றால் சரிதான். மங்கை கிழவனுக்கும் கருங்கம்மாளுக்கும் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். மங்கை கிழவன் என்ற ஆரிபு கருங்கம்மாளுக்கு 2005ம் ஆண்டில் கருப்பன் சொத்துக்களை பொறுத்து ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் பிரிபடாத சொத்துக்களை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார். கருப்பனின் சொத்தில் கருப்பனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். மங்கைகிழவன் என்ற ஆரிபுவின் மனைவி கருங்கம்மாளுக்கு குழந்தைகள் இல்லை என்பதால் அந்த சொத்துக்கள் மங்கை கிழவன் என்ற ஆரிபுவின் சகோதரர்களுக்கு சென்றுவிடும் என்றால் சரிதான். நான் கருப்பையா என்ற அன்வர் உசேனின் மனைவி என்றால் சரிதான். பஞ்சர்வணம் என்ற ஜெரினா ஹாலித்துக்கு தாவா சொத்துக்களில் உரிமை உள்ளது என்றால் சரிதான். கருப்பனின் வாரிசுகள் தவிர வேறுயாருக்கும் தாவா சொத்துக்களில் உரிமை இல்லை என்றால் சரிதான்.

<u>9ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

9ம் பிரதிவாதியின் நீதிமன்ற காப்பாளர் 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

<u>10 முதல் 14 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்துக்கள் மங்கைகிழவன் என்ற ஆரிபுக்கு பூர்வீக சொத்துக்களா அல்லது கிரைய சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்கள். மங்கைகிழவன் என்ற ஆரிபுடன் உடன் பிறந்தவர்கள் யார்யார் என்றால் என் கணவர், கருப்பையா என்கிற அன்வர் உசேன், மங்களம், பஞ்சவர்ணம் என்ற ஜெரினா காலித். பஞ்சவர்ணம் என்ற ஜெரினா காலித் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். மங்களம் இறந்துவிட்டார், அவருக்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். மங்கை கிழவன் என்ற ஆரிபு அவருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் அவரது மனைவி கருங்கம்மாளுக்கு பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரிதான். என் கணவர் ஏற்கனவே தாவா சொத்துக்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் மங்கை கிழவன் என்ற ஆரிபு அவரது மனைவி கருங்கம்மாளுக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என கணவர் கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டுள்ளது தவறு என தெரியவந்ததால் என் கணவர் அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டார். அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு விரோதமாக தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்தான் என் கணவர் சாட்சியம் சொல்ல வரவில்லை என்றால் சரியல்ல. மங்கை கிழவன் என்ற ஆரிபு அவரது மனைவி கருங்கம்மாளுக்கு 10 முதல் 14 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். 10 முதல் 14 பிரதிவாதிகள் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தங்களை கருங்கம்மாளின் வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரியும் வாரிசு சான்றிதழ் வழங்க உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. 10 முதல் 14 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை நான் படித்துத் பார்த்தேனா என்றால் இல்லை. 10 முதல் 14 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் அவர்கள் கருங்கம்மாளின் வாரிசுகள் என்பதையும், வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும், அதற்கு பதில் வழக்குரை என் கணவர் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கான பட்டா 10

முதல் 14 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் மாற்றிக்கொண்டார்கள். பயிர் காப்பீடு அவர்கள் பெற்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் அனுபவம் 10 முதல் 14 பிரதிவாதிகளின் வசம் உள்ளது என்றால் சரியல்ல. எங்களின் அனுபவத்தில் உள்ளது. நாங்கள் தாக்கல் செய்துள்ள பட்டாக்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு 10 முதல் 14 பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டுவிட்டது என்றும் அதை மறைத்து பழைய பட்டாக்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கருங்கம்மாள் 2012ம் ஆண்டு இறந்தார். 2012ம் ஆண்டு வரை தாவா சொத்துக்கள் கருங்கம்மாளின் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். கருங்கம்மாள் மறைவிற்கு பிறகு தாவா சொத்துக்களின் அனுபவம் 10 முதல் 14 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருக்கிறது என்றால் நாங்கள் 9 பேர் அனுபவித்து வருகிறோம். மங்கைகிழவன் என்ற ஆரிபு தன் மனைவி கருங்கம்மாளுக்கு சொத்துக்களை எழுதி கொடுத்த போது அவர் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்டார் என்றால் சரிதான். 10 முதல் 14 பிரதிவாதிகள் கருங்கம்மாளின் வாரிசுகள் என்பதால் நாங்கள் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக என் கணவரை விசாரித்தால்தான் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் கணவர் கேட்டுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.